செ.வெ.எண்: 568/2019 நாள்: 14.11.2019

## திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா - 2019 மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (14.11.2019) அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா-2019 முன்னிட்டு அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இந்து சமய அறநிலையத் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. பா. சாமுண்டிஸ்வரி, இ.கா.ப., செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, கூடுதல் ஆணையர் திருமதி. என். திருமகள், திருக்கோயில் இணை ஆணையர் திரு. இரா. ஞானசேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. சு. ஜானகி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. ஆனந்த்குமார், இ.ஆ.ப., முன்னாள் அமைச்சர் திரு. ராமச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டத்தில் பேசியதாவது ‘திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் திருக்கார்திகை தீபத்திருவிழாவை சிறப்பாக நடத்திட இன்று ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. திருக்கார்த்திகை தீபத்திருவிழா 01.12.2019 அன்று அதிகாலை 05.00 மணிக்கு மேல் 06.15 மணிக்குகள் கொடியேற்றமும், 06.12.2019 அன்று வெள்ளி ரதம் தேரோட்டமும், 07.12.2019 அன்று மகா ரதம் தேரோட்டமும், 10.12.2019 அன்று அதிகாலை 04.00 மணிக்கு பரண தீபம் தரிசனமும், மாலை 06.00 மணிக்கு மகா தீபம் தரிசனமும் நடைபெறுகிறது. தீபத்திருவிழா நடைபெறும் 10 நாட்களும் 25 முதல் 30 இலட்சம் பக்தர்கள் திருவண்ணாமலை வருகை புரிவார்கள் என எதிர்பார்கப்படுகிறது. மேலும், இந்த ஆண்டு பௌர்ணமி கிரிவலம் 11.12.2019 காலை 11.10 மணிக்கு தொடங்கி, 12.12.2019 காலை 11.05 மணி வரை நடைபெறுகிறது. இந்த நேரத்தில் 5 இலட்சம் பக்தர்கள் பௌர்ணமி கிரிவலம் வருவார்கள் என எதிர்பார்கப்படுகிறது.

தீபத்திருவிழா வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக திருவண்ணாமலை நகரினை இணைக்கும் 9 அணுகு சாலைகளிலும் 2420 பேருந்துகள் நிறுத்தும் வகையில் 15 தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்படுகிறது. மேலும், 85 இடங்களில் 24,000 கார்கள் நிறுத்துவதற்கான கார் பார்கிங் வசதி செய்யப்படுகிறது. இதற்கான முன்பதிவு இணையதளம் மூலம் செய்வதற்கு வசதி செய்யப்படுகிறது. தற்காலி பேருந்து நிலையங்கள் மற்றும் கார் பார்கிங் இடங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் உணவகம், காவல் மையம், அடிப்படை வசதிகள் கழிப்பறைகள், மின் விளக்குகள், மேற்கூரைகள், குடிநீர் வசதி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் தமிழகம் முழுவதிலிருமிருந்து 2500 சிறப்பு பேருந்துகள் 6500 நடைகள் இயக்கப்படவுள்ளது. மேலும், 2000 பேருந்துகள் பயணிகளை ஏற்றி இறக்கும் வகையில் 500 பேருந்துகள் பார்க்கிங்கில் இருக்கும். தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து கிரிவலப்பாதைக்கு செல்ல 125 தொடர் மினி பேருந்துகள் இயக்கப்படுகிறது. போக்குவரத்துத் துறை மூலமாக ஆட்டோ கட்டணம் 2.5 கி.மீ. வரை ரூ.20/-ம், அதற்கு மேல் ரூ.25/-ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தென்னக இரயில்வே மூலமாக 14 சிறப்பு இரயில்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தால் விழுப்புரம் மற்றும் வேலூர் மார்கமாக 650 கூடுதல் சிறப்பு பேருந்துகளும், சிறப்பு இரயில்கள் இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதரத் துறை மூலமாக திருக்கோயில் மற்றும் கிரிவலப் பாதையில் 13 நிலையான மருத்துவ முகாம்கள், 3 நடமாடும் மருத்துவ வாகனம், ஒரு தியேட்டர் ஆம்புலன்ஸ், 15 எண்ணிக்கை 108 ஆம்புலன்ஸ் வாகனம், 16 இரு சக்கர ஆம்புலன்ஸ் வாகனம், 5 ஜம்ப் கிட், 34 தகவல் மையங்கள் ஏற்பாடு செய்யப்படுகிறது. காவல் துறை மூலம் 8500 காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளார்கள். தீயணைப்புத் துறை மூலமாக 29 தீயணைப்பு வாகனங்கள், 447 தீயணைப்பு வீரர்கள் பணிபுரிய உள்ளார்கள். திருவண்ணாமலை மலை ஏறும் பாதைகளாக கண்டறியப்பட்டுள்ள 17 இடங்களில் 70 வனத் துறை அலுவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளார்கள். மேலும், திருக்கோயிலுக்கு வெளியே 119 சிசிடிவி கேமிராக்களும், உள்ளே 231 சிசிடிவி கேமிராக்களும் பொருத்தப்பட்டு கண்காணிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரகம், மாவட்ட காவல் துறை அலுவலகம், தீயணைப்பு அலுவலகம், வட்டார போக்குவரத்து அலுவலகம் ஆகிய 4 அலுவலகங்களில் கட்டுப்பாட்டு அறை ஏற்பாடு செய்யப்படுகிறது.

திருக்கார்த்திகை தீபத்திருவழா வரும் பக்தர்களின் வசதிக்காக 600 கழிப்பறைகள், 400 தற்காலிக சிறுநீர் கழிக்கும் இடங்கள், திருவண்ணாமலை நகரத்தை இணைக்கும் 9 அணுகு சாலைகளில் 42 இடங்களில் குளிக்கும் அறைகள் மற்றும் கழிப்பறை வசதியுடன் ஏற்பாடு செய்யப்படுகிறது. மேலும், அனைத்து குடிநீர் தொட்டிகளும் ஆழ்துளை கிணறுகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுவை சார்ந்த 3500 உறுப்பினர்கள் கிரிவலப் பாதையில் பக்தர்களுக்கு உதவி செய்யும் பணியிலும், பிளாஸ்டிக், உணவு தட்டுகள் வீசாமல் இருக்க அறிவுறுத்தும் பணியில் ஈடுபடவுள்ளனர். கிரிவலப் பாதையில் 375 இடங்களில் தற்காலிக குப்பை தொட்டிகள் அமைக்கப்படுகிறது. தூய்மை பணி மேற்கொள்வதற்கு 2600 துப்புரவு பணியாளர்கள் இதர உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பணி அமர்தப்படுகிறார்கள்.

கிரிவலப் பாதையில் கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் எந்தெந்த இடங்களில் உள்ளது என்பதற்கான வழிகாட்டுதல் பலகைகள் இணைப்பு சாலைகள் மற்றும் கிரிவலப் பாதை முழுவதும் வைக்கப்பட்டுள்ளது. அண்ணதானம் வழங்குவதற்கு 7 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்புத் துறை மூலமாக 9 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஆவின் பூத் 34 இடங்களிலும், தகவல் மையங்கள் 34 இடங்களிலும் அமைக்கப்படுகிறது. பரணி தீபத்திற்கு 4000 நபர்களும், மகா தீபத்திற்கு 6000 நபர்களும் கட்டளைதாரர்கள் மற்றும் உபேதாரர்கள் அனுமதிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சிறப்பு கட்டண தரிசன டிக்கெட் ரூ.500/- மற்றும் ரூ.600/- கட்டணத்தில் 1100 நபர்களுக்கு இணையதளம் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வரிசையில் நிற்கும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் 2000 நபர்கள் பரண தீபத்திற்கும், 2500 நபர்கள் மகா தீபத்திற்கும் கோவிலுக்குள் அனுமதிக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் துணிப்பை கொண்டு வரும் பக்தர்களுக்கு குலுக்கல் முறையில் 12 நபர்களுக்கு தங்க நாணயம், 72 நபர்களுக்கு வெள்ளி நாணயம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், 3 இடங்களில் துணிப் பைகள் வழங்குவதற்கும், 5 இடங்களில் பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக துணிப் பைகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. கால்நடை சந்தை, வாகனம் நிறுத்துமிடங்கள், தொடர் பேருந்து சேவை, சிறுவியாபாரிகள் என எதற்கும் வரிகள் உள்ளிட்ட எந்த கட்டணமும் வசூலிக்கப்படாது. திருக்கோயில் மற்றும் கிரிவலப் பாதையில் கற்பூரம் ஏற்றுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதிகமாக கற்பூரம் ஏற்றும் 3 இடங்கள் கண்டறியப்பட்டு அந்த இடங்களில் தீயணைப்பு துறையின் சிறிய வாகனம் நிறுத்தப்படவுள்ளது. பக்தர்களின் வசதிக்காக 10 இடங்களில் அவர்கள் கொண்டு வரும் பொருட்களை வைப்பதற்கான கட்டணமில்லா ஆடை அறைகள் (Cloak Rooms) ஏற்பாடு செய்யப்படவுள்ளது. மகா தீபம் நாள் அன்று மலை ஏறுவதற்கு 2500 பக்தர்களுக்கு மட்டும் மாவட்ட நிர்வாகம் மூலம் அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளை போல் இந்த ஆண்டு திருவண்ணாமலை திருக்கார்த்திகை தீபத்திருவிழாவை அனைவரும் ஒற்றுமையாக செயல்பட்டு சிறப்பாக நடத்திட கேட்டுக்கொள்கிறேன்' என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**